# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

ஆணை எண்: 222 /பேரூ/2022

நாள்: 06.12.2022

திரு. அ. தங்கவேலு
கள்ளக்குறிச்சி மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், மணலூர்பேட்டை, மேற்கு சாலியர் தெரு, எண். 36ல் வசிக்கும் திரு. அ.தங்கவேலு என்பவரின் 10.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.11.2022-ல் பெறப்பட்டு 222/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், மணலூர்பேட்டை, மேற்கு சாலியர் தெரு, எண். 36ல் வசிக்கும் திரு. அ.தங்கவேலு என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"மேற்படி மணலூர்ப்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. மேகநாதன் என்பவர் 10.11.2021 முதல் இங்கு பணியாற்றி வருகிறார். இவர் பணியேற்று 11 மாதங்களில் புதியதாகக் கட்டி வரும் வீடுகளுக்கு அனுமதியளிப்பதாகக் கூறி நூதன முறையில் பல்லாயிரம் ரூபாய் கொள்ளையடித்துள்ளார்.

இவ்வாறு அவர் கொள்ளையடிக்க உறுதுணையாக மேற்படி பேரூராட்சியில் கணினி இயக்குபவராகப் பணியாற்றிவரும் திருமதி ராதா என்பவரும், அவரது கணவர் எந்த வேலைவெட்டியும் இல்லாமல் மேற்படி செயல் அலுவலருக்கு எடுபிடியாகவும், சட்ட விரோத செயல்களில் மேற்படி செயல் அலுவலருக்கு உறுதுணையாகவும் இருந்து வருபவருமான தியாகு(எ) திருமலையும் மணலூர்ப்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் புதியதாக வீடுகட்டிவரும் நபர்களின் வீடுகளுக்கு, வீடு வீடாகச் சென்று சட்டப்படி வீடுகட்ட அனுமதிபெற வேண்டுமானால் வீட்டின் பரப்பளவுக்குத் தகுந்தவாறு ரூபாய் 30 முதல் ரூபாய் 50 ஆயிரம் வரையில் செலவாகும். இப்பொழுது வந்திருக்கும் செயல் அலுவலர் மிகவும் நல்லவர், நீங்கள் அவரை நேரில் பார்த்து

சட்டப்படி அனுமதித்து செலவழிக்கும் பணத்தில் பாதி கொடுத்தால் போதும் எந்த சிக்கலும் இல்லாமல் வாய்மொழி அனுமதி பெற்று வீடுகட்டிக் கொள்ளலாம் என்று பேசி அவர்களை மூளை சலவை செய்து பணம் வசூலித்து விடுவர். இதே போல் அலுவலகத்திற்கு வரும் நபர்களிடம் நயமாக பேசி அவர்களின் மூளையை சலவை செய்து அவர்களிடம் பணம் வசூலித்துக் கொடுக்கும் பணியை மேற்படி அலுவலக பதிவறை எழுத்தர் பழநி என்பவர் கச்சிதமாக செய்து விடுவார்.

மேற்படி கணினி இயக்குபவர் திருமதி ராதா (1) மேற்படி ராதாவின் கணவர் தியாகு (எ) திருமலை (2) பதிவறை எழுத்தர் திரு. பழநி (3) ஆகிய மூவரும் சட்ட விரோதமாக வசூலித்துக் கொடுக்கும் பணத்தில் பெரும் பகுதியை மேற்படி செயல் அலுவலர் எடுத்துக் கொண்டு ஒரு சிறு பகுதியை மேற்படி மூவருக்கும் பிரித்துக் கொடுப்பதோடு, இந்த கொள்ளைக்கு உறுதுணையாகவும் ஆதரவாகவும் இருந்துவரும், மணலூர்ப்பேட்டை பேரூராட்சியின் தலைவர் திருமதி J. ரேவதிக்கு கொள்ளையடிக்கும் பணத்தில் 10% கமிஷனாக கொடுத்து விடுகிறார். எனவே, பேரூராட்சி தலைவரும் இந்த நூதன கொள்ளையைக் கண்டு கொள்வதில்லை.

பொதுவாக பேரூராட்சி செயல் அலுவலரும் பேரூராட்சி தலைவர் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்களும் பேரூராட்சிக்குச் சொந்தமான சொத்துக்களையும் பாதுகாப்பவராக (custodian) இருக்க வேண்டுமேயொழிய பேரூராட்சி சொத்துக்களை கையூட்டிற்காக (Bribe)தாரை வார்த்துக் கொடுக்கும் தரங்கெட்டவர்களாக இருக்கக் கூடாது.

(i) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 167 சாலையோர அமைப்பு அல்லது கட்டட எல்லைக் கோட்டிற்குள் கட்டடங்களைக் கட்டக்கூடாது (Buildings not to be constructed within street alignment or building line) என்றும்;

(ii) சட்டப்பிரிவு 168ன்படி தெருவின் முன்புறம் நீண்டிருக்கும் கட்டடங்கள் அல்லது சுவர்களைப் பின்னே தள்ளி கட்ட வேண்டும் (setting back projecting buildings or walls) என்றும் கூறுகின்றன. (ஆதாரம் :1)

(iii) மேற்படி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 180ன்படி தெருக்களில் ஆக்கிரமிப்புகள் (Encroachment on streets) கூடாது என்கிறது (ஆதாரம்: 2) அதாவது மேற்படி சட்டப்பிரிவுகளும் வீட்டின் ஒரு சிறுபகுதி கூட தெருவில் நீட்டிக் கொண்டிருக்கக்கூடாது என்றும், தெருவில் வீடுகட்ட தடை செய்ய வேண்டுமென்றும் கூறுகின்றனர்.

ஆனால், மணலூர்ப்பேட்டை வடக்கு சாலியர் வீதி சர்வே 161 முழுவதும் தெரு என்று தெரிந்தும் (ஆதாரம் : 3) தெருக்களில் வீடுகட்ட அனுமதிக்கக்கூடாது என்ற மேற்படி சட்டப்பிரிவு 167 ; 168 மற்றும் சட்டப்பிரிவு 180ஐ பற்றி நன்கு அறிந்திருந்தும், மணலூர்ப்பேட்டை செயல் அலுவலர் திரு. மேகநாதன் என்பவர், மேற்படி மணலூர்ப்பேட்டை பேரூராட்சி மன்றத் தலைவி திருமதி J.ரேவதி என்பவர் தன் கட்டுப்பாட்டில், அதாவது தனது சட்ட விரோத முறைகேடுக்கெல்லாம் உறுதுணையாக அதாவது உடந்தையாக உள்ளார் என்ற ஆணவத்தில் மேற்படி வடக்கு சாலியர் தெருவின் மத்தியில் சுமார் 600 சதுர அடியில் முதலில் ஒருவரிடம் முன்பணமாக ரூ.10 ஆயிரமும் பிறகு ரூ.20 ஆயிரம் ஆக மொத்தம் 30 ஆயிரம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு மேற்படி தெரு சர்வே 161 வடக்கு சாலியர் தெரு மத்தியில் சுமார் 600 சதுர அடி இடத்தில் கடை கட்ட அனுமதித்துள்ளார் (ஆதாரம்: 5- கடையின் புகைப்பட நகல்)

சர்வே 161, மேற்குசாலியர் வீதி தெரு என்பதற்கு மேலும் சில ஆதாரங்கள்:

நான், மணலூர்ப்பேட்டையில் உள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் அகற்றக்கோரி சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணையில் W.P.No. 14232/2009 என்ற எண்ணில் வழக்குத் தொடர்ந்தேன். அதன் பேரில் 07.01.2020ல் தீர்ப்பளித்து உயர்நீதிமன்றம் மேற்படி நபர்கட்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டது. (ஆதாரம் :6) அதனை எதிர்த்து, சில ஆக்கிரமிப்பாளர்கள் தங்களிடமிருந்து ஆவணங்களின் அடிப்படையில் கிராம கணக்குகளில் திருத்தம் செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணையில் W.P. No. 38126 to 38130 மற்றும் இதர ரிட் மனுக்கள் மூலம் வழக்குத் தொடுத்தனர் (ஆதாரம்:7) இதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பு இடங்களை அளவீடு செய்ய வந்த திருக்கோவிலூர் வருவாய் வட்டாட்சியர் திரு. சி. பீட்டர் அவர்கள், அவரது ந.க. ஆ3/458/2004 நாள் 20.02.2004 அறிக்கை முதல் பக்கம் 1) W.P. 38269/03 M.P.முருகன் என்பவர் கட்டியுள்ள வீடு தெரு புல எண். 161 ஐ ஆக்கிரப்பு செய்து 39 x 71 அடி அளவுள்ள மெத்தை வீடு கட்டியுள்ளதாகவும், எனவே அதனை கிராம கணக்குகளில் திருத்தம் செய்ய இயலாது என்று கூறியுள்ளார். (ஆதாரம் :8)

மேலும் வட்டாட்சியர் அவர்கள் அவரது மேற்படி அறிக்கையில் பத்தி 17) W.P. 38243/03 தவமணி w/o ரவிச்சந்திரன், என்பவர் புல எண் 162/7ல் பட்டா பெற்றுள்ளார். ஆனால் மேற்படி புலத்திற்கு மேற்குப் பக்கம் தெரு புலத்தில் (அதாவது புல எண்.161 தெரு புலத்தில்) ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார். கணக்கு திருத்தம் செய்து பட்டா வழங்க இயலாது (ஆதாரம் :8 a)என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆக மேற்படி M.P.முருகன் (1) மேற்படி தவமணி (2) ஆகிய இருவரும் தெரு புல எண். 161ல் சட்ட விரோதமாக வீடு கட்டி இருப்பதை நன்கு தெரிந்திருந்தும் மேற்படி மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மேகநாதன் மேற்படி முருகன் மற்றும் தவமணி ஆகியோரது வீடுகளுக்கு இடையில் இருநபர்களுக்கும் ரூ.60 ஆயிரத்திற்காக சட்ட விரோதமாகவும் முறைகேடாகவும் கடை கட்ட வாய்மொழி அனுமதியளித்திருப்பது வெட்கக் கேடான செயலாகும்.

1. மேலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 209 குடிசைகள் அமைக்கவும், புதுப்பிக்கவும் செயல் அலுவலரின் அனுமதி இல்லாமல் வேலை தொடங்க தடை செய்கிறது. (Prohibition against Commencement of work without permission) (ஆதாரம் :9)

2. குடிசைகள் அல்லாத பிற கட்டடங்கள்:

(i) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 198 குடிசைகள் அல்லாத பிறகட்டிட மனையை முன்னதாகவே ஏற்பளிப்பது அவசியம் என்றும் ( Necessity for prior approval of site) அவ்வாறு ஏற்பளிக்கும் வரையிலும் ஒரு கட்டத்தை அமைக்க அல்லது புதுப்பிக்கக்கூடாது என்றும் கூறுகிறது. (ஆதாரம் :10)

(ii) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 199 குடிசைகள் அல்லாத பிறகட்டிடங்கள் அனுமதியின்றி பணி தொடங்க தடை விதிக்கிறது. (Prohibition against commencement of work without permission)

அதாவது செயல் அலுவலர் அனுமதியளித்தாலன்றி மற்றபடி, அவர் அனுமதி அளிக்கிற வரையிலும் ஒரு கட்டடத்தைக்கட்ட அல்லது புதுப்பிக்கத் தொடங்கக் கூடாது என்று கூறுகிறது. (ஆதாரம்:11)

(iii) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 216 சட்ட விரோதமாய் – அதாவது செயல் அலுவலரின் அனுமதி பெறாமல் – தொடங்கப்பட்ட, நடத்திவரப்பட்ட அல்லது கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தப்படும் அதிகாரத்தை வழங்குகிறது. (ஆதாரம் :12)

(iv) நகர் ஊரமைப்பு ஆணையர் நாள் 03.01.2017ல் அனுமதியற்ற கட்டுமானம்/அனுமதிக்கு மாறான கட்டுமானம் ஆகியவற்றை அறிவிப்பு வழங்கிவிட்டு, கட்டுமானத்தை மூடிமுத்திரை இடுதல், மற்றும் இடித்து அகற்றவும் அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும், திட்டகுழுமங்கள் மட்டுமல்லாது நகர்ப்புற உள்ளாட்சிகளும் அமலாக்க நடவடிக்கையைத் தொடரலாம் என தெளிவுரை வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது ஆனால், எந்த நகராட்சிகள் சட்டத்தையோ அரசாணையையோ, நகர ஊரமைப்பு ஆணையர் போன்ற உயர்அதிகாரிகளின் ஆணையையோ மதிக்காத செயல் அலுவலர், நடுத்தெருவில் வீடு கட்டிக் கொள்ள நபருக்கு ரூ.30 ஆயிரம் கையூட்டு பெறுவது மட்டுமல்லாமல் தமது சொந்தபட்டா இடத்தில் வீடுகட்ட ஆரம்பிக்கும் நபர்களிடம் கொள்ளையடிக்க ஒரு நூதன முறையை கையாண்டு வருகிறார்.

அதாவது சட்டப்படி பேரூராட்சியில் புதியதாக வீடுகட்ட அனுமதி பெற வேண்டும். ஆனால் ஒரு செலவினப்பட்டியல் தயார் செய்து குறிப்பிட்ட மூன்று நபர்களிடம் கொடுத்து புதியதாக வீடுகட்ட ஆரம்பிக்கும் நபர்களிடம் இந்த பட்டியலைக்காட்டி இதில் உள்ளவாறு பணம்கட்டி அனுமதிபெற அதிகம் செலவாகும். இதில் பாதித்தொகையைக் கட்டிட பரப்பளவுக்குத் தகுந்தவாறு கொடுத்தால் நமது செயல் அலுவலர் புளுபிரிண்ட் இல்லாமலேயே வாய்மொழி அனுமதி வழங்கிவிடுவார். நீங்கள் அனுமதிபெற ஆகும் செலவிலேயே பாதி மிச்சமாவதோடு, புளுபிரிண்ட் போடும் செலவும் மிச்சமாகும் என்று ஆலோசனைக் கூறி அதன்படியே செயல்பட்டும் வருகிறார்.

மேற்படி மணலூர்ப்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மேகநாதன் தயாரித்தனுப்பும் கட்டணப்பட்டியல்:

ஒருவர் ஒரு பத்து லட்சம் மதிப்பீட்டில் வீடுகட்ட வேண்டுமென்றால் பேரூராட்சிக்கும் செலுத்தவேண்டிய கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| (1) | காலிமனை வரி சதுர அடிக்கு காலாண்டு,1/2 ஆண்டு கட்டணம் சுமார் | ரூ.10,000 |
| (2) | கட்டிட உரிமம் கட்டிட பரப்பளவுக்குத் தகுந்தவாறு சதுர அடிக்கு ரூ.60/– வீதம் | ரூ.20,000 |

| | | |
|---|---|---|
| (3) | செப்டிக்டேங்க் கழிவறை, குளியலறை மதில் சுவர் அமைக்க கல்மண் சேகர கட்டணம் | ரூ.1,000 |
| (4) | ஆய்வுக்கட்டணம் | ரூ.2,000 |
| (5) | விண்ணப்பக் கட்டணம் | ரூ.500 |
| (6) | கூடுதல் வரைபடக் கட்டணம் | ரூ.250 |
| (7) | நகர் அபிவிருத்திக் கட்டணம் | ரூ.1500 |
| (8) | தொழிலாளர் நலநிதிக் கட்டணம் 10%<br>1 லட்சத்திற்கு ரூ.1000/– வீதம் | ரூ.10,000 |
| | ஆக மொத்தம் | ரூ.46,250 |

RTI மூலம் பெறப்பட்ட புதியதாக கட்டப்படும் வீடுகளுக்கு 01.11.2021 முதல் 08.08.2022 வரை 10 வீடுகட்கு மட்டுமே அனுமதி வழங்கி வீடுகட்டி வருவதாகப் பட்டியல் ஒன்று அளித்துள்ளார்.

மேற்படி சட்ட விரோத அனுமதியற்ற கட்டுமான மாத வாய்மொழி அனுமதியுடன் கையூட்டின் அடிப்படையில்) கட்டப்பட்டு வரும் 12 வீடுகளை மட்டும் நிழற்படம் (போட்டோ) எடுத்து இத்துடன் இணைத்துள்ளேன்.

இவைகள் மட்டுமல்ல இவ்வாறு கையூட்டின் பேரில் வாய்மொழியாக அனுமதி அளித்துள்ள வீடுகள் குறைந்தபட்சம் 50 வீடுகளாவது இருக்கும். அவற்றையும் கீழே பட்டியலிட்டுள்ளேன்.

நிழற்படம் எடுத்து இணைக்கப்பட்டுள்ள வீடுகளின் பட்டியல்:

| வரிசை எண் | தெருவின் பெயர் | வீட்டு உரிமையாளர் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | மேற்குசாலியர் தெரு | சண்முகம் | ஆதாரம்:17 |
| | தி.மலைமெயின் ரோடு | அம்முரவிச்சந்திரன் | ஆதாரம்:18 |
| 2. | தியாகதுருகம் ரோடு | மு பாரக்பாய் | ஆதாரம்:19 |
| | தி.மலைமெயின் ரோடு | இராணுவவீரர்,மிலிட்டரிகாரர் | ஆதாரம்:20 |
| 3. | தி.மலைமெயின் ரோடு | கண்ணன் | ஆதாரம்:21 |
| | தி.மலைமெயின் ரோடு | சுப்பிரமணியன் S/o தங்கவேல் | ஆதாரம்:22 |
| 4. | முனியப்பன் கோயில் சந்து வீதி | இந்திராகாந்திசூப்பர் மார்க்கட்காரர் வீடு | ஆதாரம்:23 |
| | முனியப்பன் கோயில் சந்து வீதி | சந்துரு S/o அய்யம்பெருமாள் | ஆதாரம்:24 |
| 5. | செட்டித் தெரு | மேட்டுக்கடை ராஜா | ஆதாரம்:25 |
| | M.G.R. நகர் | நடராஜன் S/o பாண்டுரங்கன் | ஆதாரம்:26 |

சட்ட விரோதமாக கையூட்டின் பேரில் வாய்மொழி அனுமதியளித்து அரசுக்கு ஏகப்பட்ட இழப்பீட்டை ஏற்படுத்தியுள்ள போட்டோ ஆதாரம் கொடுக்க முடியாத சில சட்ட விரோத அனுமதியற்ற கட்டுமானங்களில் சில:

1. கம்மானத்தெரு சந்துரு செட்டியார் வீட்டருகில்
2. தியாகதுருகம்ரோடு ராஜாராமன் B.A.B.L.வீடு

3. திருக்கோவிலூர் ரோடு பெட்ரோல் பங்க் அருகில் குமார் கட்டியுள்ள இரண்டு வீடுகள்
4. அருந்ததியர் தெருவின் ஒரு வீடு
5. போஸ்டாபீஸ் அடுத்ததெருவில் கருணாகரன் வீட்டருகில் ஒரு வீடு
6. தி.மலைமெயின் ரோடு ரமேஷ் கோழிக்கடை எதிரில் ஒரு வீடு
7. மூப்பனார் கோயில் தெரு,வடக்குத்தாங்கல் வழியில் 6 கடைகள்
8. வடக்குத்தாங்கல் மற்றும் பெயர் தெரியாத 7 வீடுகள்
9. ஞானம் பெற்றான் தாங்கல் ரோட்டுக்குத்தென்புறம் நாட்டார்வீடு
10. ஞானம் பெற்றான் தாங்கல் ரோட்டுக்கு வடபுறம் அய்யம்பாளையம் சண்முகம் வீடு, மற்றும் 4 வீடுகள்

எனவே, மணலூர்ப்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மேகநாதன் சட்டத்திற்குப் புறம்பாக மேற்படி சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 167 : 168; 198;199; 209; 180; 182 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் 03.01.2017 கடிதத்தில் அனுமதியற்ற கட்டுமானம்.அனுமதிக்கு மாறான கட்டுமானம் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற அனைத்தையும் நன்கு அறிந்திருந்தும் வேண்டுமென்றே திட்டமிட்டு சட்டத்திற்குப் புறம்பாக கையூட்டு பெற்றுக் கொண்டு செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் சட்டத்திற்குப் புறம்பாக செயல்பட்டு அரசுக்குப் பல லட்சங்கள் இழப்பீடு ஏற்பட காரணமாய் இருந்து வருவதால், அவர் மீதும் அவரது ஊழலுக்கும் குற்றச்செயல்கட்கும் உடந்தையாக இருந்து வரும் கணினி இயக்குபவரான திருமதி ராதா மற்றும் அவரது கணவர், செயல் அலுவலருக்கு எடுபிடியாக இருந்து கையூட்டு பெற்றுத்தரும் தரகராகப் பணியாற்றும், தியாகு(எ) திருமலை, பதிவறை எழுத்தர் பழனி மற்றும் பேரூராட்சித் தலைவர் J.ரேவதி ஆகிய அனைவர் மீதும் இந்திய தண்டனைச் சட்டப்படி குற்றவியல் நடவடிக்கை எடுத்து சட்ட விரோதமாக சேர்ந்த சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமாறு பணிவன்புடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 21.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4) மனுதாரர் 24.11.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.**

**5) மணலூர்பேட்டை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 24.11.2022 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் :**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு மணலூர் பேட்டைபேரூராட்சியில் வீடு கட்டும் உரிமையாளர்களிடம், அவர்களின் வீட்டை கட்டிட என்னால் வாய்மொழி

உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள மணலூர்பேட்டை வடக்கு சாலியர் தெருவில் 600 சதுர அடியில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கடைக்கும், மேலும் மணலூர் பேட்டை பேரூராட்சியில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள 14 கட்டடங்களுக்கும் 25.7.2022 மற்றும் 27.10.2022 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் மேலும் நோட்டீஸ் அளிக்கப்பட்டதன் தொடர் நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட்டு, அதன் விவரங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள புல எண் 161–ஐ ஆக்கிரமிப்பு செய்து சட்ட விரோதமாக மெத்தை வீடு கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, அவ்வாறு சட்டவிரோதமாக வீடு கட்டப்பட்டிருந்தால், அதன் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு, சட்டப்படி நோட்டீஸ் வழங்கப்படும்.

மேலும் மணலூர்பேட்டை பேரூராட்சியின் கணினிப் பொறியாளர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீதான காழ்ப்புணர்ச்சியின் காரணமாக மனுதாரர் பொய்யான குற்றச்சாட்டை கூறியுள்ளார். இதில் உண்மை ஏதுமில்லை.

மனுதாரருக்கு அவரது மனைவிக்கும் சொந்தமாக 5 வீடுகள் மணலூர்பேட்டை மேற்கு சாலியர் தெருவில் உள்ளது. அவ்வீடுகளுக்கான 5 வரி விதிப்புகளுக்கு சொத்து வரியாக ரூபாய் 6924/–ம் மேலும் 4 குடிநீர் கட்டணம் 22,800/– ரூபாயும் மனுதாரரால் இன்னும் பேரூராட்சியில் செலுத்தப்படவில்லை. சொத்து வரியை செலுத்திடுமாறு பேரூராட்சியால் கோரப்பட்டதில் நான் ஏன் சொத்து வரி கட்ட வேண்டும்; என்னால் சொத்து வரி கட்ட முடியாது என கறாராக தெரிவித்துள்ளார். எனினும், மனுதாரர் சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணத் பேரூராட்சி செலுத்திட அறிவிப்புகள் ஓரிரு நாட்களில் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், மேற்கண்ட பேரூராட்சியில் பட்டா இல்லாத இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு சொத்து வரி விதிப்பதில்லை. எனவே, அங்குள்ள வீடுகளுக்கு சொத்து வரி இதுவரை விதிக்கப்படவில்லை.

இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 24.11.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக வழங்கப்பட்ட அறிவிப்புகளின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**6) மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.11.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

மணலூர்பேட்டை பேரூராட்சியில் செயல் அலுவலராக கடந்த 10.11.2021ம் தேதி பதவி ஏற்ற நாள் முதல் பல்லாயிரம் ரூபாய் கொள்ளையடித்துள்ளதாகவும், பேரூராட்சி கணினி இயக்குபவராக பணியாற்றிவரும் திருமதி ராதா என்பவரும் அவரது கணவர் தியாகு(எ) திருமலையும் மற்றும் பழனி பதிவறை எழுத்தர் ஆகியோர் உறுதுணையாக

இருப்பதாகவும் திரு. அ. தங்கவேலு மணலூர்பேட்டை என்பவர் மூலம் வரப்பெற்ற புகார் மனுவில் உள்ளவை முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019, அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019, அரசாணை எண். 154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 13.10.2020, சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை–2, ந.க. எண். 12875/2018/இ1, நாள் 27.10.2020 மற்றும் மணலூர்பேட்டை பேரூராட்சி தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண்.87, நாள் 19.11.2020 ஆகியவற்றின் வழிகாட்டுதல்களின்படி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் கட்டட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மணலூர்பேட்டை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டடம் கட்டுபவர்கள் அனைவரும் கட்டிட அனுமதி பெறவேண்டும். கட்டிடம் கட்டுவதற்கு முன்பே வரைபடம் (Blue Print)தயார் செய்து பொறியாளார் வழிகாட்டுதலின்படி முறையாக விண்ணப்பித்து கட்டட அனுமதி கோருபவர்களின் இடத்தினை பேரூராட்சி செயல் அலுவலர் என்ற முறையில் தளஆய்வு செய்து அனுமதி கோரியுள்ள இடத்தின் நீளஅளவு எண். பரப்பு, சாலை மற்றும் கட்டிடம் கட்ட ஏற்ற இடமா போன்ற விபரங்களை ஆராய்ந்த பிறகுதான் கட்டட உரிமம் வழங்கப்படுகிறது என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு விதிமுறைகளில் வாய்மொழி உத்திரவும் என்று எதுவும் இல்லை. கட்டட அனுமதியாக முறையான உத்திரவு பெறுவதற்கே பொதுமக்கள் தயங்குகின்றனர். இந்த நிலையில் எந்தவித உத்திரவும் இல்லாமல் ஆயிரக்கணக்கில் பணம் தர எவரும் முன்வரமாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. எனவே, மேற்படி புகாரில் தெரிவித்துள்ளபடி எந்த நபருக்கும் வாய்மொழி உத்திரவு வழங்கியதும் இல்லை; அதற்காக எந்த ஒரு தொகையும் எவரிடமும் பெற்றதும் இல்லை என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மணலூர்பேட்டை பேரூராட்சியில் எந்த ஒரு சொத்தையும் எவருக்கும் தாரைவார்த்து கொடுக்கவில்லை என்பதையும் வடக்கு சாலியர் தெருவின் மத்தியில் 600 சதுரஅடி அளவில் இரண்டு கட்டடங்களுக்கு பணம் பெற்றுக் கொண்டு அனுமதி வழங்கியதாக கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

செயல் அலுவலரின் அனுமதி பெறாமல் தொடங்கப்பட்ட, நடத்திவரப்பட்ட அல்லது கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தப்படும் அதிகாரம் செயல் அலுவலருக்கு உள்ளதாக புகார்தாரர் தெரிவித்துள்ளார்.

கட்டட அனுமதி பெறாமல் கட்டடப்படும் கட்டிடங்களை கண்டறிந்து கட்டிட அனுமதி பெறுமாறு'' 25.07.2022 மற்றும் 27.10.2022ம் தேதிகளில் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்ற விபரத்தினை பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தில் ஆக்கிரமிப்பு இருப்பின் அவை கண்டறியப்பட்டு வருவாய் துறை மூலம் படிவம் 1 வழங்கப்பட்ட பிறகு படிவம் 7 மற்றும் படிவம் 6

பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருவாய்துறை மற்றும் காவல்துறை உதவியுடன் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்பதை பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

சட்டவிரோதமாக அனுமதியற்ற கட்டுமானமாக வாய்மொழி அனுமதியுடன் கட்டப்பட்டு வருவதாக பட்டியல் இடப்பட்டுள்ள எந்த நபரிடமும் செயல் அலுவலரோ அல்லது அவரது சார்பாக எந்த நபருமோ எந்தவித கையூட்டும் பெறவில்லை என்பதையும் வேண்டுமென்றே என்மீதும் எனது அலுவலக பணியாளர்கள் மீதும் பொய்யான குற்றச்சாட்டுகளை மனுதாரர் சுமத்தியுள்ளார் என்பதை இதன் மூலம் பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு, மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் கணினி இயக்குநர் திருமதி ராதா ஆகியோர் மீது பல குற்றச்சாட்டுகளை தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர், மணலூர்பேட்டை செயல் அலுவலர், வாய்மொழி உத்தரவின்மூலம், பலருக்கு கட்டடங்கள் கட்ட அனுமதி அளித்து அதன் மூலம் பண பயன் பெறுவாதாக தெரிவித்துள்ளதற்கு எந்தவித ஆவண ஆதாரம் அளிக்கவில்லை. ஆனால் பலவீடுகள் மணலூர்பேட்டை பேரூராட்சியின் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது என்பது அறிய முடிகிறது. அவ்வாறான அனுமதியில்லாமல் கட்டப்பட்ட 14 கட்டங்களுக்கு மணலூர்பேட்டை பேரூராட்சியால் தாக்கீது வழங்கப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது. மேலும், புல எண். 161ஐ ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்தால், அதனை ஆய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவை செலுத்த மறுப்பதாக மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் வாக்கு மூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

மணலூர்பேட்டை பேரூராட்சி, செயல் அலுவலர் தன்னுடைய அறிக்கையின் ஒரு பகுதியில் ‘‘மணலூர்பேட்டை பேரூராட்சியில் எந்த ஒரு சொத்தையும் எவருக்கும் தாரைவார்த்து கொடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.” இம்முறைமன்றத்திற்கு 2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவச் சட்டத்தின் உரிமையியல் நீதிமன்றத்தின் அந்தஸ்த்தை அளித்துள்ள நிலையில், ஒரு பொறுப்பான நிலையில் இருக்கும் செயல் அலுவரின் மேற்கண்ட கருத்துக்கள் இம்மன்றத்தின் மாண்பை குறைக்கும் விதமாக உள்ளது என இம்முறை மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. இவ்வாறான கருத்துக்களை இம்முறைமன்றம் கண்டிக்கிறது. இனிவருங்காலத்தில் இவ்வாறான முறையற்ற தனிப்பட்ட கருத்துக்களை தெரிவிக்கும்பட்சத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும் என்று இம்முறை மன்றம் எச்சரிக்கிறது.

மேலே கண்டுள்ள விவரங்களின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

மணலூர்பேட்டை பேரூராட்சியில், உதவி இயக்குநர், தலைமையில் குழு ஒன்றினை அமைத்து அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் குறித்து விரிவாகஆய்வு செய்து 45 நாட்களுக்குள் அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு அனுப்புமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மணலூர்பேட்டை பேரூராட்சியில் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், கடைகள், வீடுகள் கட்டியதற்கு உரிய காலத்தில் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்காத செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குனர் அவர்களுக்கு பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மனுதாரரிடமிருந்து அவர் செலுத்த வேண்டிய சொத்துவரி, மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. அ.தங்கவேலு,
   எண். 36, மேற்கு சாலியர் தெரு,
   மணலூர்பேட்டை–605754
   திருக்கோவிலூர் வட்டம்
   கள்ளக்குறிச்சி மாவட்டம்
2. செயல் அலுவலர்,
   மணலூர்பேட்டை பேரூராட்சி,
   கள்ளக்குறிச்சி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் (பொது) மற்றும்
   ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம் அலுவலகம்,
   நகர் நிர்வாக அலுவலகம்,இராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக